**தம்புள்ள மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ள மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, சாசுப் பாய்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் தம்புள்ள மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்த ஆண்டிலேயே கிரயத்தை கணக்குகளிலிருந்து பதிவழித்தல் மாநகர சபையின் கணக்கீட்டு கொள்கையாக இருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறு ஒரே முறையில் பதிவழித்திருந்த சொத்துக்களின் கிரயத்தை மீண்டும் மீளாய்வாண்டு ரூபா.18,781,086 உம் கடந்த ஆண்டு ரூபா.66,359,634 உம் தேய்வாக வருமான செலவுக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தன. | தம்புள்ள மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கணக்கீட்டு கொள்கையின் 10/04 பிரகாரம் ஆண்டினுள் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களை தேய்மானமிடுவதில்லை எனும் கொள்கையை பின்பற்றுகின்றது. அக் கொள்கையின் மீது 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள், நேர்கோட்டு முறையின் கீழ் தேய்விடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். | கணக்கீட்டு கொள்கையின் 10.2 பந்தி பிரகாரம் தேய்விட வேண்டியமை. |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு கிடைத்திருந்த ரூபா.91,093 ஆன நட்டம் மீள்நிரப்பலும் ரூபா.730,250 ஆன கடந்த ஆண்டிற்கு சீராக்க வேண்டிய வருமானமும் வைப்புக் கணக்கில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்வதாவும் ஜர்னல் குறிப்பு மூலம் சீராக்க நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டேன். | கணக்குகளில் சரியாக தேவையான சீராக்கங்களை செய்ய வேண்டியமை. |
| (ஆ) | கடந்த ஆண்டிற்குரிய ரூபா.3,603,778 ஆன வருமானம் மீளாய்வாண்டு வருமானமாகவும், 02 சந்தர்பங்களில் மீளாய்வாண்டிற்கு பெறவேண்டிய கூட்டுத் தொகை ரூபா.4,248,482 ஆன வருமானம் கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | தாமதத் தவரின் காரணமாக 2019 ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்படாத அவ் வருமானத்தை மீளாய்வாண்டில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தேன். | கணக்குகளில் சரியாக தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டியமை. |
| (இ) | திகம்பதஹ கழிவுப் பொருள் முகாமை வளவின் நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்ய மீளாய்வாணடு மற்றும் கடந்த ஆண்டுகளில் செலவிட்ட ரூபா.279,533,898 ஆன தொகை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து மீள்நிரப்பியதால் குறித்த சொத்து மானியம், ஊடாக மூலதனத்திலிருந்து பங்களிக்கும் கணக்கிற்கு கணக்கீடு செய்ய வேண்டிய போதும் வருமானத்திலிருந்து மூலதனத்திற்கு பங்களிக்கும் கணக்கில் குறிப்பிட்டதில் அப் பெறுமானத்தால் வருமானத்திலிருந்து மூலதனத்திற்கு பங்களிக்கும் கணக்கு கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு நிதிக்கூற்றுக்களுடன் காட்ட நடவடிக்கை எடுக்கிறேன் | கணக்குகளில் சரியாக தேவையான சீராக்கங்களை செய்ய வேண்டியமை. |
| (ஈ) | வருமான செலவுக் கூற்றில் மூலதன உதவி வருமானத்தின் கீழ் காட்ட வேண்டிய மொத்த மூலதன வருமானமான ரூபா 49,472,393 ஆன போதும் அது ரூபா 4,500,000 ஆக ரூபா 44,972,393 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இவ் உதவி திகம்பதஹ கழிவு மீள்சுழற்சி கருத்திட்டத்திற்காக கிடைத்துள்ள இச் செலவு மீள்நிரப்பும் அடிப்படையில் கிடைத்துள்ள உதவியாகும். | கணக்குகளில் சரியாக தேவையான சீராக்கங்களை செய்ய வேண்டியமை. |
| (உ) | மூலதன உதவி செலவு பொது வைப்புக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்தமையால் ரூபா.17,801,253 இனால் செலவு குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இச் செலவு மீள்நிரப்பும் அடிப்படையில் கிடைத்துள்ளதால் பொது வைப்பு மற்றும் முற்பணக் கணக்கு ஊடாக இணக்கம் செய்யப்பட்டுள்ளது. | முற்பணம் மற்றும் கணக்குகீடு செய்வதனூடாக ஆண்டு செலவிற்கு உட்படாததால் நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ரூபா.1,041,595 இற்கு கொள்வனவு செய்திருந்த தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், ரூபா 682,920 ஆன வேலை கடன்கொடுனர் மீதியொன்றும் ரூபா.16,625,533 ஆன களஞ்சிய இருப்பு பெறுமதியும் ரூபா.70,371 ஆன மேலதிக பற்று வட்டியும் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதாக. | கணக்குகளிற்கு சரியாக தேவையான சீராக்கம் செய்ய வேண்டும். |
| (எ) | ரூபா.2,889,667 ஆன கிடைக்க வேண்டிய நானாவித வருமானமும் ரூபா.1,531,979 ஆன மலசலகூட கட்டண வருமானமும் ரூபா.512,121 ஆன 01 சதவீத வியாபார வரி வருமானமும் நிதிக்கூற்றுக்களில் கைவிட்பபட்டிருந்தன. | ஆவணங்களை பரிசோத்து விரைவில் சரிசெய்ய நடடிக்கை எடுக்கிறேன். | கணக்குகளிற்கு சரியாக தேவையான செம்மையாக்கம் செய்ய வேண்டும். |
| (ஏ) | தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 03 செயல்களிற்காக பெற்றிருந்த மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா.124,363,726 ஆன கடன் மீதிகள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடப்பட்டிருந்தன. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு மீதியை கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுள்ள கடன் தொகை தொடர்பாக பிரதேச சபை மற்றும் மாநகர சபை தற்போதும் இணக்கப்பாட்டிற்கு வராததால், அம் மீதிகள் கணக்குளிற்கு உட்படுத்தப்படவில்லை. | கணக்குகளிற்கு சரியாக தேவையான செம்மையாக்கம் செய்ய வேண்டும். |
| (ஐ) | நிலையான சொத்து கணக்கு மீதிகள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலான பங்களிப்பு கணக்கு மீதிகளிற்கு இடையில் ரூபா.317,522,806 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யகிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | ரூபா.19,418,646 ஆன திருத்திய காசு மீதியிற்கு பதிலாக செம்மையாக்காத ரூபா.15,630,919 ஆன காசு மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டு திருத்த நடவடிக்கை எடுப்பதாக. | வித்தியாசத்தை இனங்கண்டு சரியான மீதியை கணக்குகளுடன் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| 07 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் ஓத்த அறிக்கை பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா.1,610,871 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கணக்கு மீதிகள் 02 இன் மீதிகள் வித்தியாசமில்லை. 05 மீதிகளில் ரூபா.1,448,494 ஆன பெறுமதி மேலும் சரிசெய்ய வேண்டியுள்ளது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரியாக கணக்குகளிற்கு தேவையான செம்மையாக்கல்கைள மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | பாராளுமன்ற சட்டம் | | | |
| (i) | மாநகர சபை கட்டளை சட்டம் | | | |
| | 206(அ) | தற்காலிக கடன் அல்லது மேலதிக பற்றாக ஏதேனும் காலத்திற்கு சபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் அங்கீகரிக்க முடியுமான போதும் மதிப்பீடொன்று சமர்பிக்கப்படாது ரூபா.15,630,919 ஆன அமைய ஊழியர் சம்பளம் வழங்க மேலதிக பற்று வசதி பெறப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | கட்டளை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ii) | 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) பிரிவு | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் காலாவதியாகியுள்ள 17 வேலைக்களிற்காக புதிய அனுமதிப் பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 12 வேலைகளிற்கு சுற்றாடல் குழுவின் பரிந்துரை கிடைத்துள்ளதாக. | சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா.19,286,030 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா.11,433,711 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையின் அன்றாட நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் போது கிடைக்கும் வருமானத்திலிருந்து மேற்கொள்ள முடியுமான செலவிற்கான கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய போதும் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி அங்கீகரிக்கப்படும் வரை அமைய அடிப்படையில் இவ் | மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | |
|---|---|
| மகா சபை அங்கீகாரத்துடன் நிதியத்தால் சம்பளம் மற்றும் படிகளை செலுத்தும் அடிப்படையில் 55 அமைய ஊழியர்களை ஆட்சேர்த்து ரூபா.46,844,174 சம்பளம் மற்றும் படிகளாக மீளாய்வாண்டிலும் செலுத்தப்பட்டிருந்தன. இது சபையின் நிதிப் பிரச்சினைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. | ஊழியர்களை ஆட்சேர்துள்ளதாக. |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டு இறுதியில் மொத்த வருமான நிலுவை ரூபா 34,180,764 ஆனது. அனுமதிப்பத்திரத்தின் கீழான சுற்றுலா ஹோட்டல் கட்டணமாவதுடன் அறவிடப்படாத கட்டணத்திற்காக சட்ட மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கும் நிலுவை கடை வாடகையை 12 தவணைகளில் தீர்ப்பதாக உடன்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் ஏற்பட நிலைமை பொருளாதாரத்திற்கு தாக்கம் ஏற்படுத்தியதால் நிலுவை வருமானம் அதிகரிப்பதற்கு காரணமானதாக. | மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் பேரூந்து தரிப்பிட மற்றும் மொத்த சந்தை கடையறை நிலுவை வாடகை ரூபா.10,107,755 ஆனது. | கடந்த ஆண்டு நிலுவையிலிருந்து ரூபா.221,085 உம், இவ் ஆண்டிற்காக ரூபா.291,291 உம் அறவிடப்பட்டுள்ளதாக. | மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | மாநகர சபைக்கு சொந்தமான 21 கடையறைளை மீளாய்வாண்டு வாடகைக்கு வழங்காததால் பெற முடியுமாக இருந்த ரூபா.507,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | விண்ணப்பதாரிகள் முன்வராத 21 கடையறைகளுக்காக தீர்மானமொன்று பெற்றுக்கொள்ள மீண்டும் சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக | பெற்றுக் கொள்ள முடியுமான வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

மாநகர சபைக் கட்டளை சட்டத்தின் 04 ஆம் பிரிவு கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய தம்புள்ள பேரூந்து தரிப்பிடத்திற்கு அருகில் அமைந்துள்ள காணியின் 3780 வர்க்க அடி அளவான ஒரு பகுதியை மாநகர சபையினால் குத்தகைக்கு பெற்று அங்கு வெளிதரப்பினரின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

செலவில் 21 கடையறைகள் நிர்மாணித்து அவற்றிலிருந்து நகர சபைக்கு கடையறை வாடகையொன்று கிடைக்குமாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அக் கருத்திட்டத்திற்குரிய உடன்படிக்கையில் கடையாறை வாடகை அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது அறவிட வேண்டும் எனும் ஏற்பாடொன்றை உட்படுத்த வேண்டுமென ஆளுநரினால் கட்டளையிடப்பட்டிருந்த போதும் அப் பிரிவிற்கு பதிலாக மாநகர சபையினால் மதிப்பிடப்படும் மாதாந்த வாடகையை அறவிட வேண்டுமென குறிப்பிட்டதில் கிடைக்கவிருந்த வருமானமொன்று சபைக்கு இழக்கப்படுவதுடன் 21 கடையறைகளிற்கு பதிலாக 40 கடையறைகள் நிர்மாணிக்கப்பட்டதால் 19 கடையறைகளின் வருமானம் சபைக்கு இழக்கப்படுகிறது.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ரூபா.6,048,300 ஆன கிடைக்க வேண்டிய 04 கணக்கு மீதிகள் (நிலுவை வீத வரி ரூபா.1,342,460, பெற வேண்டிய விளம்பர பலகை ரூபா.1,128,816, செலுத்த வேண்டிய வெட் ரூபா.1,044,624, முத்திரை கட்டணம் ரூபா.2.532,400 ஆளுநரின் அங்கீகாரமின்றி ஜர்னல் குறிப்பினூடாக பதிவழிக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டு சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | முறையான அங்கீகாரத்தின் பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கணக்கு மீதிகளை பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | யானைவேலி நிர்மாணித்தல் நகர பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் தேவையான முற்பணத்தை அவரிற்கு வழங்காது 2020 ஆகஸ்ட் 06 திகதி ரூபா.150,000 தொகையை கீழ் நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்காது நகர ஆணையாளர் எடுத்திருந்தார். இக் கொடுப்பனவை அங்கீகரித்தல், உருதி செய்தல், பெறுனரின் கையொப்பம் போன்ற அனைத்தும் நகர ஆணையாளரினால் இடப்பட்டிருந்ததுடன் 2020 செப்தம்பர் 04 திகதி அளவிலும் இம் முற்பணத்தில் ரூபா.90,000 தொகை கையிறுப்பில் இருந்தது. மலசல கழிவுத் தொகுதியின் அவசர கொள்வனவிற்காக ஆணையாளர் 2019 ஆகஸ்ட் 03 திகதி எடுத்திருந்த ரூபா.100,000 முற்பணம் எவ்வித கொள்வனவும் செய்யப்படாது 2020 ஜுன் 15 அளவிலும் கையிறுப்பில் இருந்தது. | இம் முற்பணம் நகர ஆணையாளரின் பொறுப்பில் காணப்பட்டதாகவும் தேவைக்கு ஏற்ப பணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ரூபா 100,000 முற்பணத்தை 2020 ஜுன் 12 திகதி தீர்த்ததாகவும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2011 பெப்ரவரி 09 திகதிய இலக்கம் 13/2008 (iv) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் திருத்தப்பட்ட 2019 மே 31 திகதிய இலக்கம் 13/2018 (v) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக அங்கீகாரமின்றி அங்கீகார எல்லையை விஞ்சி தம்புள்ள மாநகர சபையின் நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு 2020 ஜனவரி முதல் ஜூன் வரையான காலத்தினுள் மேலதிக கடமைகளிற்காக 785 லீட்டர் எரிபொருளிற்காக ரூபா 81,598 செலுத்தப்பட்டிருந்தது. | நிதிக் குழுவின் மற்றும் மகா சபையின் அங்கீகாரத்தை வைத்துள்ளதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | தாபன விதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் 5.3.1 பிரிவு பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச இல்லமொன்றிற்கு தகுதியுடைய அலுவலரின் சம்பளத்திலிருந்து 10 சதவீதம் அறவிட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ள போதும் 2017 செப்தம்பர் முதல் 2020 நவம்பர் வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய ரூபா.53,575 ஆன வீட்டு வாடகை நகர ஆணையாளரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிக அறவீட்டு செயற்பாட்டின் பின்னர் முன்நடவடிக்கை எடுப்பதாக. | தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | இலங்கை நிர்வாக சேவை II தர உத்தியோகத்தரான நகர ஆணையாளர் மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவில் பதில் கடமை படிகளை பெற்றுக் கொள்ள அங்கீகாரமின்றி மற்றும் தாபன விதிக்கோவை 12.5.4 பிரிவு பிரகாரம் நிறந்தர பதவி வகிப்பதற்கும் அதே நேரம் வேறொறு பதவியில் பதில் கடைமை சம்பளம் வழங்க முடியுமான போதும் பதவியொன்றில் கடமை மேற்கொள்ளாது பதிற்கடமை சம்பளமாக இலங்கை நிர்வாக சேவை I தரத்தின் ஆரம்ப சம்பளத்தின் பதிற்கடமை சம்பளமாக 25 சதவீதம் அதாவது ரூபா.437,075 ஆன தொகையை 2017 செப்தம்பர் முதல் 2020 ஜுலை வரை செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தியுள்ள படிகளை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (உ) | விடுமுறை தினங்களில் கள கடமைகளில் ஈடுபடட்தாக வரவு மற்றும் வெளிச் செல்லல் தொடர்பாக விரல் அடையாள இயந்திரத்தில் அல்லது ஏனைய தொடர்புடைய பதிவேடுகளில் அல்லது வரவு புத்தகத்தில் குறிப்பிடப்படாமை மற்றும் அலுவலர் கள வேலைகளை மேற்கொண்டதனை உருதிப்படுத்தாது 03 மாதங்களில் 15 நாட்களிற்காக விடுமுறை படிகளாக ரூபா.56,726 ஆன தொகை நகர ஆணையாளரிற்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | கள கடமைகளில் ஈடுபடட்தாகவும் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டங்களினால் மற்றும் ஓட்டக் குறிப்பூடாக உறுதியாவதாக. | தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள பொது மயானத்திற்காக 2020 மே 06 திகதி 640 வேலிக் கம்பங்களை ரூபா.492,800 இற்கு கொள்வனவு செய்து மயானத்துடன் தொடர்புடைய சங்கத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. பௌதீக பரிசோதனையின் போது வழங்கப்பட்ட கம்பங்களில் ரூபா.42,350 பெறுமதியான கம்பங்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் 05 மயானங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா.207,900 பெறுமதியான 270 கம்பங்கள் 04 மாதகாலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது குவிக்கப்பட்டிருந்தன. குறித்த கம்பங்கள் மாநகர சபைக்கு கிடைக்க 14 நாட்களிற்கு முன்னர் மற்றும் 03 நாட்களிற்கு முன்னர் சங்கத்திற்கு மீண்டும் வழங்கியதாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளன. | நிலவுகின்ற தொற்று நிலைமை காரணமாக மற்றும் சிரமதான அளவில் மேற்கொள்ளப்படுவதால் தாமதத்திற்கு காரணமானதாகவும் 65 கம்பங்கள் நகர சபை வளவில் குவிக்கப்பட்டுள்ளதாகவும். | பற்றாக்குறைக்கு மற்றும் பயன்படுத்தப்படாமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பொறுப்புதாரர்களை உறுதி செய்தல். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளிற்கு அமைய எரிகருவியொன்றை ரூபா 19.4 இலட்சத்திற்கு கொள்வனவு செய்ய தெரிவு செய்யப்பட்ட வழங்குனரை நிராகரித்து முன்மாதிரி செயற் நடடிக்கையொன்றை முன்வைக்காது மற்றும் தொழிநுட்ப ஆய்வுக் குழுவின் பரிந்துரை இன்றி இரண்டாம் வழங்குனரை தெரிவு செய்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா.168,615 ஆன நட்டம் மற்றும் 08 டென்டர் நிபந்தனைகளை மீறியிருந்ததுடன் ஒப்பந்த காலம் முடிவடைய முன்னர் பாரிய திருத்த வேலைகளிற்குட்பட்டு இவ் எரிகருவி பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. | இலக்கம் 06.01.16 கொண்ட சபை தீர்மானத்தின் மீது இக் கொள்வனவு இடம் பெற்றுள்ளதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 03 நபர்களிற்கு வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ள பொருத்தமானவர்களா என, உருதி செய்துகொள்ளாது, அவர்களை தெரிவு செய்து குறை வருமானம் பெறுபவர்களிற்கு பண்ட உதவி வழங்குவதற்கு ரூபா.748,736 ஆன 03 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதும் உதவி பெற தகுதியுடைய நபர்கள் என உருதி செய்து கொள்ளாது நிருத்தியுள்ள 03 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | குறை வருமானம் பெறுபவர்கள் என பிரதேச செயலாளரிடமிருந்து உருதியாகவில்லை என. | வேலை உத்தேசங்களை உருதி செய்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மாநகர சபைக்கு சொந்தமாக செயற்படும் முன்பள்ளியொன்று இல்லாததிருக்கையில் ஆரம்பிக்கும் முன் ஆயத்தமின்றி முன்பள்ளி மேற்பார்வையாளர் பதவிக்கு ஆட்சேர்த்து அதற்காக 2019 செப்டம்பர் 16 திகதி முதல் செயற்பாடின்றி ரூபா.576,813 சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | அங்கீகார ஆளணியில் இப் பதவி காணப்படுவதால் அப் பதவிக்கு ஆட்சேர்த்து நூலக நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ளதாக. | தாபன விதிக்கோவை மற்றும் நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாநகர சபையின் வீதித் தொழிலாளி ஒருவர் தாபன விதிக் கோவை II பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.1.2 பிரிவு பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிச குடியரசை அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொண்டமை மற்றும் அப்பந்தியின் 31.1.10 பிரிவு பிரகாரம் அரச சேவையை அவமானப்படுத்தும் வகையில் நடந்தமைக்காக 2017 ஜுன் 01 திகதி முதல் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. தாபன விதிக்கோவையின் குறித்த பந்திக்கு 2004 திசெம்பர் 15 திகதி மேற்கொண்ட 06/2009 கொண்ட திருத்தத்தின் 27.10.2 பிரகாரம் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்க ஒரு வருடத்தை விஞ்சும் போது சம்பளத்தில் அரைவாசியை கொடுப்பனவு செய்ய விடய அதிகாரிகளிற்கு அதிகாரம் இருக்கையில் 2020 ஒக்டோபர் 08 திகதி மொத்த நிலுவை சம்பளத்தையும் கொடுப்பனவு செய்த காரணத்தால் ரூபா.602,905 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு வெளியில் மேற்கொண்ட தவறு காரணமாக அரச சேவையின் நலனிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாததன் காரணமாக மீண்டும் அரச சேவையில் நியமித்ததாக. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |